செய்தி வெளியீடு எண்: 057 நாள் : 25.01.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழகம் முழுவதும் அரசு இ–சேவை மையங்களை அமைத்து நிர்வகித்து வருகிறது. தலைமைச் செயலகம், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகம், சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டல அலுவலகங்கள், அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் அனைத்து கோட்ட அலுவலகங்கள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மண்டல பாஸ்போர்ட் அலுவலகங்கள் என மொத்தம் 465 இடங்களில் அரசு இ–சேவை மையங்களை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் அமைத்து நிர்வகித்து வருகிறது.

இந்த இ–சேவை மையங்களில் வருவாய்த் துறையின் சேவைகளான குடும்பத்தில் பட்டதாரி இல்லை என்பதற்கான சான்றிதழ், கணவனால் கைவிடப்பட்டோருக்கான சான்றிதழ், வருமானச் சான்றிதழ், சாதிச்சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் வழங்கப்படுகின்றன. இவற்றிற்கு சேவைக் கட்டணமாக ரூ.50/– வசூலிக்கப்படுகிறது. மேலும் சமூக நலத்துறையின் சேவைகளான முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம், ஈ.வெ.ரா மணியம்மமையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள்அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம் ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன. இவற்றிற்கு சேவைக் கட்டணமாக ரூ.100/–வசூலிக்கப்படுகிறது. இ–சேவை மையங்களில் விண்ணப்பம் செய்தவர்களுக்கு அவர்களின் சான்றிதழ் தொடர்பான தகவல் அவர்களுடைய கைபேசிக்கு குறுஞ்செய்தியாக (SMS) அனுப்பப்படுகிறது.

தற்போது, சென்னை மாநகராட்சி தலைமையிடம், சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டல அலுவலகங்கள், அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் அனைத்து கோட்ட அலுவலகங்கள் ஆகிய அலுவலக வளாகங்களில் நிறுவப்பட்டுள்ள அரசு இ–சேவை மையங்களில் மேற்கூறிய சேவைகளுடன் சொத்து வரி, தொழில் வரி மற்றும் கம்பெனி வரி ஆகியவற்றை செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

இதுமட்டுமின்றி இம்மையங்களில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை செலுத்தும் வசதியும் தற்போது கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மின் கட்டணத் தொகை ரூ. 1–லிருந்து ரூ. 1000/–க்குள் இருந்தால் அதற்கான சேவைக் கட்டணம் ரூ. 10/– ஆகவும்; மின் கட்டணத் தொகை ரூ. 1001/–லிருந்து ரூ. 3,000/–க்குள் இருந்தால் அதற்கான சேவைக் கட்டணம் ரூ. 20/– ஆகவும்; மின் கட்டணத் தொகை ரூ. 3001/–லிருந்து ரூ. 5,000/–க்குள் இருந்தால் அதற்கான சேவைக் கட்டணம் ரூ. 30/– ஆகவும்; மின் கட்டணத் தொகை ரூ. 5001/–லிருந்து ரூ. 10,000/–க்குள் இருந்தால் அதற்கான சேவைக் கட்டணம் ரூ. 50/– ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதுமட்டுமின்றி, மத்திய அரசின் திட்டங்களான ஆதார் அட்டை பெறுதல், பாஸ்போர்ட் சரி பார்த்தலுக்கான நாள் மற்றும் நேரம் பெற்றுக் கொள்ளுதல் ஆகிய சேவைகளும் இம்மையங்கள் மூலமாக வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்விற்கு விண்ணப்பித்தல் போன்ற சேவைகளும் இம்மையத்தில் வழங்கப்படுகின்றன.

தற்பொழுது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலம் அமைக்கப்பட்டுள்ள அரசு இ–சேவை மையம் தொடர்பான தகவல்களை செல்பேசியில் தெரிந்துகொள்கின்ற வகையில் TACTV என்ற பெயரில் செல்பேசி செயலி (Mobile Application) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த செயலி ஆண்ட்ராய்டில் (Android) இயங்கும் செல்பேசிகளில் மட்டுமே செயல்படும். இந்த செல்பேசி செயலியை பொதுமக்கள் கூகுல் ப்ளேஸ்டோரிலிருந்து (Goole Play Store) இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இச்செயலியை பயன்படுத்தி தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் அரசு இ–சேவை மையங்களின் முகவரி, வரைபடம், அருகாமையில் இருக்கும் மையத்திற்கு செல்லும் வழி, இம்மையங்களில் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பான தகவல்களையும் அரசின் சேவைகளைப் பெறுவதற்காக அரசு இ–சேவை மையத்தில் விண்ணப்பம் செய்திருந்தால் அதன் தற்போதைய நிலையையும் தெரிந்து கொள்ளலாம்.

எனவே, பொது மக்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் செல்பேசி செயலியை Google Play Store–லிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து பயன்பெறலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**